**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 387/2015**

**வழக்கு சாட்சி – அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவிச்சந்திரன் | ஜாதி | |
| தந்தை பெயர் / கணவர் பெயர் | சீனிவாசன் | தொழில் | ஊராட்சி அலுவலகத்தில் தற்காலிகப் பணியாளர் |
| கிராமம் | அரண்மனைப்புதூர் | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 49/2024. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.10.2024.

**(1வது எதிரி ஆஜர். 2வது இறந்துவிட்டார். 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:-**

நான் தற்போது அரண்மனைப்புதூரில் இருந்துகொண்டு ஊராட்சி அலுவலகத்தில் தற்காலிகப் பணியாளராக பணிபுரிந்துவருகிறேன். தற்போது, என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது ஆகும். கடந்த 23.08.2015 ஆம் தேதி காலை 7 மணியைப்போல், கொடுவிலார்பட்டி மெயின்ரோட்டிற்கு வந்து போலிசார் அங்குவந்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் நானும், ஈஸ்வரன் என்பவரும் கையெழுத்திட்டோம். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

அ.சா. 1 எனது உடன்பிறந்த சகோதரியைத்தான் திருமணம்

முடித்துள்ளார் என்றார் சரிதான். போலிசார் வரைபடம் வரைந்தார்கள். எழுதினார்கள். ஆனால் என்ன விவரம் என்று எனக்குத் தெரியாது. அ.சா.1 காமராஜ் எனக்கு மாமா உறவு வேண்டும் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல், சொன்ன நேரத்திற்கு, சொன்ன இடத்திற்கு போலிசார் வரவில்லை என்றாலும், இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.